StudentBounty.com

# INTERNATONAL INDIAN SCHOOL – DAMMAM

## SUMMATIVE ASSESSMENT –II ( MARCH -2014 )

## TAMIL - CLASS –VI

## தமிழ் - ஆறாம் வகுப்பு

Time :- 3 Hours | Maximum Marks :- 90

நேரம் :- 3 மணி | மதிப்பெண்கள் :- 90

## பகுதி- 1

அ.கொடுக்கப்பட்ட பத்தியைப் படித்து , கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க. 5 x 2 = 10

மனிதர் ஒவ்வொருவரும் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகளும் , செய்ய வேண்டிய கடமைகளும் உள்ளன. பெற்றெடுத்த பிள்ளையைப் பேணி காப்பது தாயின் கடமை. உணவும் , உடையும் , வீடும் , கல்வியும் தந்து வளர்க்க வேண்டியது தந்தையின் கடமை. நல்ல மாணாக்கரை உருவாக்குவது ஆசிரியர் கடமை. கற்க வேண்டிய பாடங்களைக் கற்பதும் கல்வியில் ஊக்கம் காட்டுவதும் மாணவர்கடமை. பெற்றோர்க்கும் , ஆசிரியர்க்கும் , நாட்டுக்கும் , பள்ளிக்கும் மாணவர்கள் கடமைப்பட்டவர்கள். மாணவர் தாம் கல்வி கற்கும் பள்ளியின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு நடக்க வேண்டும். மாணவர் வகுப்பறைகளிலும் , விளையாட்டுத் திடல்களிலும் , பிற இடங்களிலும் அமைதி காக்க வேண்டும். கவிதை , கட்டுரை , சொற்பொழிவு , ஓவியம் , விளையாட்டு முதலிய போட்டிகளில் கலந்து கொண்டு பள்ளிக்குப் பெருமைத் தேடித்தர வேண்டும். அமைதியும் , அடக்கமும் , இன்சொல் பேசுதலும் மாணவர் மீது மதிப்பை உண்டாக்கும்.

வினாக்கள் :-

1.தந்தையின் கடமை என்ன ?

2.மாணவர்கள் யாருக்கெல்லாம் கடமைப்பட்டவர்கள் ?

3.எவ்வெவ இடங்களில் மாணவர்கள் அமைதி காக்க வேண்டும் ?

4.மாணவர்கள் கலந்து கொள்ள வேண்டிய போட்டிகள் யாவை ?

5.எவை மாணவர்க்கு மதிப்பை உண்டாக்கும் ?

ஆ.பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றனுக்கு கட்டுரை எழுதுக. 1 x 8 = 8

1.நீ விரும்பும் பறவை அல்லது விலங்கு

2.சிறுசேமிப்பு

இ.உன் பிறந்தநாள் விழாவிற்கு தோழன்/தோழியை அழைத்துக் கடிதம் ஒன்று எழுதுக. 1 x 8 =8



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

# பகுதி -2

<u>இலக்கணம் :-</u> 15 x1 =15

<u>அ.பொருத்தமான சான்றினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.</u>

1.உயர்திணை

(அ.ஒட்டகம் ஆ.கடல் இ.சூரியன் ஈ.ஆசிரியர்)

2.முன்னிலை இடம்

(அ.அவர்கள் ஆ.நீங்கள் இ.எங்கள் ஈ.நான்)

3.பன்மை

(அ.வீடு ஆ.மரம் இ.மாணவர் ஈ.ஆசிரியர்கள்)

<u>ஆ.தகுந்த விடையைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.</u>

4.திணை ___________ வகைப்படும்

(அ.இரண்டு ஆ.மூன்று இ.நான்கு ஈ.ஆறு)

5.நடந்து முடிந்த நிகழ்ச்சியைக் குறிப்பது __________

(அ.இறந்தகாலம் ஆ.நிகழ்காலம் இ.வருங்காலம் ஈ.எதுவுமில்லை)

6.கேள்வியால் வருவது ______________ வாக்கியம்

(அ.செய்தி வாக்கியம் ஆ.வினா வாக்கியம் இ.கட்டளை வாக்கியம் ஈ.உணர்ச்சி வாக்கியம்)

<u>இ.அடைப்புக்குள் கூறியவாறு சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.</u>

7.என்னே நீலகிரி மலையின் அழகு! (செய்தி வாக்கியமாக்குக)

(அ.நீலகிரி மலை எப்படி இருக்கிறது ? ஆ.நீலகிரி மலை மிகவும் அழகாக உள்ளது

இ.நீலகிரி மலைக்குச் செல்! ஈ. நீலகிரி மலை எங்குள்ளது ?)

8.முட்டை கோழியால் இடப்பட்டது (செய்வினையாக்குக)

(அ.கோழி முட்டை இட்டது ஆ.கோழி என்ன செய்தது ?

இ.கோழியது முட்டை ஈ.கோழி முட்டையிட்டதா ?)

9.மறுநாள் பள்ளி விடுமுறை என்று ஆசிரியர் கூறினார் (நேர் கூற்றாக்குக)

(அ.ஆசிரியர் ," மறுநாள் பள்ளி விடுமுறை " என்றார்



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

ஆ. ஆசிரியர் ," நாளை பள்ளி விடுமுறை " என்றார்

இ. ஆசிரியர் ," நாளை பள்ளி வா " என்றார்

ஈ. ஆசிரியர் மறுநாள் பள்ளி விடுமுறை அல்ல என்றார்)

<u>ஈ. தகுந்த இலக்கணக் குறிப்பைத் தேர்ந்தெடுத்து எழுதுக.</u>

10. பெரியோர்க்குக் கீழ்படி !

(அ. செய்தி வாக்கியம் ஆ. வினா வாக்கியம் இ. கட்டளை வாக்கியம் ஈ. உணர்ச்சி வாக்கியம்)

11. கண்ணகி

(அ. ஆண்பால் ஆ. பெண்பால் இ. ஒன்றன் பால் ஈ. பலவின் பால்)

12. குமணன் ,"நான் பரிசு பெற்றேன் " என்றான்

(அ. எதிர்காலம் ஆ. செயப்பாட்டு வினை இ. நேர்கூற்று ஈ. அயற்கூற்று)

<u>உ. சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக.</u>

13. அ. அன்னம் என்பதன் பொருள் மேல்வாய்

ஆ. அன்னம் என்பதன் பொருள் பறவை

இ. அன்னம் என்பதன் பொருள் விலங்கு

ஈ. அன்னம் என்பதன் பொருள் தாவரம்

14. அ. உயர்திணைக்குரிய பால்கள் இரண்டு

ஆ. உயர்திணைக்குரிய பால்கள் மூன்று

இ. உயர்திணைக்குரிய பால்கள் நான்கு

ஈ. உயர்திணைக்குரிய பால்கள் ஐந்து

15. அ. முற்றுபெற்ற கருத்தைத் தெரிவிக்கும் சொற்றொடர் - வாக்கியம்

ஆ. முற்றுபெற்ற கருத்தைத் தெரிவிக்கும் சொற்றொடர் - உயர்திணை

இ. முற்றுபெற்ற கருத்தைத் தெரிவிக்கும் சொற்றொடர் - இடம்

ஈ. முற்றுபெற்ற கருத்தைத் தெரிவிக்கும் சொற்றொடர் - பெயர்ச்சொல்



StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

## பகுதி -3

அ. பொருள் கூறுக. 3 x 1 = 3

1. சால்பு - 2. தண்கடல் - 3. சூளை -

ஆ. எதிர்ச்சொல் எழுதுக. 3 x 1 = 3

1. ஓடுமீன் x 2. மேதை x 3. இயற்கை x

இ. பிரித்து எழுதுக. 2 x 1 = 2

1. உற்றுழி - 2. பெருந்தலைவர் -

ஈ. நிரப்புக. 2 x 1 = 2

1. காமராசர் பிறந்தநாளைக் ________________ வளர்ச்சி நாளாகக் கொண்டாடுகிறோம்.

2. ரோபோ என்பதன் தமிழ்ப் பெயர் ________________.

உ. பொருத்துக. 4 x ½ =2

1. கர்ம வீரர் - ஔவையார்

2. முதுரை - தந்தை பெரியார்

3. நறுந்தொகை - காமராசர்

4. பகுத்தறிவு பகலவன் - அதிவீரராம பாண்டியன்

ஊ. தொகைச் சொற்களை விரித்து எழுதுக. 2 x 1 ½ = 3

1. முக்கனி - __________ , __________ , __________

2. முத்தமிழ் - __________ , __________ , __________

## பகுதி -4

அ. பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்து , கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

இந்தியா 1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 ஆம் நாள் விடுதலைப் பெற்றது. இந்தியாவின் முதல் முதன்மை அமைச்சராகப் பண்டித ஜவஹர்லால் நேரு பதவியேற்றார். தமிழ்நாட்டுக் காங்கிரசின் தலைவராக இருந்த காமராசர் 1954 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 ஆம் நாள் தமிழக முதலமைச்சரானார். பதவியேற்றவுடன் கல்வியிலே பல புரட்சிகளை ஏற்படுத்தினார். கல்வி மட்டுமா வளர்ந்தது ? 'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்' என்றார் வள்ளுவர். அதனால்



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

வேளாண்மை வளரப் பல அணைகளைக் கட்டினார். தொழில் வளர்ச்சி பெற பல ஆலைகள் அமைத்தார். பெரம்பூர் இரயில் பெட்டித் தொழிற்சாலை , தூத்துக்குடி துறைமுகம் , திருச்சி பாரத மிகுமின் நிறுவனம் முதலியன காமராசர் ஆட்சி காலத்தில் உருவானவையே.

StudentBounty.com

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 5 x 1 =5

1.தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்தவர்,

அ.ஜவஹர்லால் நேரு ஆ.காமராசர் இ.கலைஞர்

2.' சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்' என்றவர்,

அ.திருவள்ளுவர் ஆ.காமராசர் இ.ஔவையார்

3.சுதந்தர இந்தியாவின் முதல் முதன்மை அமைச்சர்,

அ.காமராசர் ஆ.மன்மோகன்சிங் இ.ஜவஹர்லால் நேரு

4.இந்தியா விடுதலைப் பெற்ற ஆண்டு

அ.1954 ஆ.1950 இ.1947

5.வேளாண்மை வளர்ச்சி பெற, காமராசர் ________________ கட்டினார்.

அ.அணைகள் ஆ.தொழிற்சாலைகள் இ.கல்வி நிலையங்கள்

ஆ.சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 5 x 1 =5

1.கொக்கு ஏன் வாடி இருக்கும் ?

அ.மீனை பிடித்து விட்டு விட்டதால்

ஆ.பெரிய மீனை எதிர்பார்த்திருப்பதால்

இ.தனக்கு பசி இல்லாததால்

2.காமராசர் பிறந்த ஊர்

அ.மதுரை ஆ.வீரவநல்லூர் இ.விருதுநகர்

3.ரோபோவின் மூளை எனப்படுவது

அ.சிலிக்கான் சில்லு ஆ.ரோபோலான் இ.ஒளிபடக்கருவி

4.புரவி எடுப்பு என்பது

அ.களிமண்ணால் பொம்மைகள் செய்வது

ஆ.களிமண்ணால் குதிரைகள் செய்வது



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

இ.மெழுகால் குதிரைகள் செய்வது

5.நீர் வற்றிய காலத்திலும் குளத்திலேயே இருப்பவை

அ.நீர் யானைகள் ஆ.நீர்ப்பறவைகள் இ.நீர்த்தாவரங்கள்

இ.எவையேனும் மூன்றனுக்கு குறுகிய விடையளிக்க. 3 x 2 = 6

1.துன்பம் வந்த காலத்து நம்மை விட்டு நீங்குபவர் எதைப் போன்றவர் ?

2.எது திருவினையாக்கும் ? எது இன்மை புகுத்தி விடும் ?

3.முதலமைச்சர் காமராசர் காலத்தில் கட்டப்பட்ட அணைகள் யாவை ?

4.ரோபோவின் மூளை , கண் ,காது மற்றும் வாய் பற்றி எழுதுக.

5.அறிஞர்க்கு அழகு யாது ?

ஈ.எவையேனும் இரண்டனுக்கு விரிவான விடையளிக்க. 2 x 5 = 10

1.காமராசர் எவ்வாறெல்லாம் பாராட்டப்படுகிறார் ?

2.ரோபோ செய்யும் பணிகள் யாவை ?

3.தெரிந்து செயல் வகை , சான்றாண்மை குறித்து எழுதுக.

4.புரவி எடுப்பு (விழா) என்றால் என்ன ?

உ.அடிபிறழாமல் எழுதுக. 2+2+4 =8

1.' இன்னா' எனத் தொடங்கும் குறளை எழுதுக.

2.' உயர்வு ' என முடியும் குறளை எழுதுக.

3.' அடக்கம்' எனத் தொடங்கும் மூதுரைப் பாடலை எழுதுக.



StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers